**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STC. No.1481/2022**

**P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | C.அல்லி |
| Father's / Husband Name | : | க/பெ.லேட்.செல்லமுத்து |
| Village | : | நாமக்கல் |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | -- |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.02.2025** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு.துரைகருணாநிதி, உதவியாளர்.

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.15 மணி**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். புகார்தாரர் தரப்பில் 1ம் சாட்சியாவேன். இவ்வழக்கில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்று இதன் மூலம் உறுதி கூறி சாட்சியம் அளிக்கிறேன்.

1. 29.06.2022-ம் தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய பல்லவன் கிராம வங்கி (தற்போது தமிழ்நாடு கிராம வங்கி), நாமக்கல் கிளை காசோலை எண்.188275 என்ற காசோலையின் அசலானது ம.சா.ஆ.1 ஆகவும்,
2. 04.07.2022-ம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ ம.சா.ஆ.2 ஆகவும்.
3. 16.07.2022-ம் தேதியிட்ட புகார்தரார் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ.3 ஆகவும்.
4. 19.07.2022ம் தேதியில் மேற்படி ம.சா.ஆ.3 அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரிக்கு தக்க தண்டனை வழங்கும்படியும், இழப்பீட்டு தொகை கிடைக்க உத்தரவுபிறப்பிக்கும்படியும் வேண்டுகிறேன்.

(எதிரி தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணத்தை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனையான பல்லவன் கிராம வங்கி என்ற வங்கி தற்போது கிடையாது என்றும், பல்வன் கிராம வங்கியும், பாண்டியன் கிராம வங்கியும் இணைப்பு செய்யப்பட்டு தற்போது தமிழ்நாடு கிராம வங்கி என்ற பெயரில் இயங்கி வருவதால் மேற்படி காசோலை குறியீடு செய்தவற்கு ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 03.29 மணி**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

C

Digitally signed by C NANDHINI
Date: 2025.02.17 19:03:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.